வேளாண்மை இணை இயக்குநர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு ச.கண்ணையா, பி.எஸ்சி(விவ), எம்.பி.ஏ.,

பநி3/10651/2023 — நாள் : 10.06.2024

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நேரடி நியமனம் தொகுதி-4ல் அடங்கிய இளநிலை உதவியாளர்(பிணையம்) பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நியமன ஆணை வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.1919//PSD-D2/2023 நாள்:02.09.2023
2. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.1919//PSD-D2/2023 நாள்:16.11.2023
3. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.அநிபி5/97025/2023-2, நாள் :08.12.2023
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.பநி3/10651/2023(1) முதல் (3) முடிய நாள்:15.12.2023

❁❁❁❁❁

**ஆணை:**

பார்வை (1)ல் கண்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி 4-ன் (அறிவிக்கை எண்.07/2022-ல் தேர்வு தேதி 24.07.2022) மூலம் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு (Selected Provisionally) வேளாண்மைத் துறைக்கு இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை (3)ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 3 இளநிலை உதவியாளர் (பிணையம்)-களை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

இந்த ஒதுக்கீடு ஆணையைத் தொடர்ந்து 3 இளநிலை உதவியாளர் (பிணையம்)-களுக்கும் புதிய ஊதிய ஏற்ற முறையில் பார்வை (4)ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டு தனியர் உரிய அலுவலகங்களில் இணைப்பில் கண்டவாறு பணியேற்றுக்கொண்டனர். இப்பணியாளர்களில் " தமிழ்வழி கல்வி பயின்றவர்களுக்கு (PSTM) அதற்கான உண்மைத் தன்மைச்சான்று உரிய அலுவலர்களிடமிருந்து பெற்ற பின்னரே பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என பார்வை(2)-ன் பத்தி எண்.16-ல் தெரிவிக்கப்பட்டதன்படி உண்மைத்தன்மைச்சான்று பெறப்பட்டுள்ளது.

இதன்படி இணைப்பில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.